## திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் டெல்லிக்குமான தேர்தல் இல்லை;

# தமிழ்நாட்டிற்கும் - என்.டி.ஏ. கூட்டணிக்குமான தேர்தல்!

### திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதியில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பரப்புரை!



**திருவள்ளூர், ஏப்.8–**

**திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் வி.ஜி.ராஜேந்திரனை ஆதரித்து, திருவள்ளூர் கனகம்மாசத்திரம் பஜார் பகுதியில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு, பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.**

தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி.; இந்த வெயிலிலும் உதயசூரியனுக்காக இத்தனை பேர் திரண்டு வந்துள்ள போதே திமுகவின் வெற்றி தெரிந்துவிட்டது.

மக்களுக்கு உதவி செய்வதற்காகவே ஒரு மருத்துவமனையை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஒருவர்தான் நம்முடைய வி.ஜி.ராஜேந்திரன். யார் உதவி என்று கேட்டாலும் தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்யக்கூடியவர். உங்களோடு பணியாற்றுவதற்கு வாய்ப்பளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாக இருக்கிறது. அவரைப் பற்றி உங்களிடம் சொல்லத் தேவையில்லை. மீண்டும் உங்கள் வி.ஜி.ராஜேந்திரன் வேட்பாளராக வந்துள்ளார்.

மக்களுக்கு சேவை செய்வதற்காகவே மருத்துவமனை ஒன்றை நடத்தி வரும் நம்முடைய வி.ஜி. ராஜேந்திரன். யார் உதவி கேட்டாலும், தன்னாலான அனைத்து உதவிகளையும் செய்து வருபவர். உங்களோடு பணியாற்றுவதற்கு அவருக்கு மீண்டும் வாய்ப்பளிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உறுதியாக உள்ளது.

முதலமைச்சர் மு,க.ஸ்டாலின் ஒன்றை குறிப்பிட்டு சொல்லி இருக்கிறார்கள். இந்தத் தேர்தல், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் டெல்லிக்குமான தேர்தல் இல்லை; தமிழ்நாட்டிற்கும் என்.டி.ஏ. கூட்டணிக்குமான தேர்தல். இந்த என்.டி.ஏ. கூட்டணி தமிழக நலன்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது; அதற்கு அதிமுக துணைபோகிறது.

ஏனெனில், நமக்கு எதிராக இருக்கும் கூட்டணியில் இருப்பவர்கள் தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்கள். அந்தக் கூட்டணியில் கைகோர்த்து மேடையில் நிற்கும் அனைவரும் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்பவர்கள்.

டெல்லியிலிருந்து வருகிற பிரதமர் நரேந்திர மோடி, அமித்ஷா, ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் தமிழகத்திற்கு வரும்போது அவர்களிடம் நீங்கள் கேட்க வேண்டும்: தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கியுள்ளீர்களா? ரயில்வே திட்டங்களுக்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கியுள்ளீர்களா? என்று.

தமிழ்நாட்டில் உள்ள மாணவர்கள் கல்விக்காக வழங்க வேண்டிய நிதி, கிட்டத்தட்ட 3,500 கோடிக்கும் மேல். அதை "ஹிந்தி படித்தால்தான் வழங்குவோம்" என்று கூறி நிறுத்தி வைத்துள்ள ஆட்சிதான் ஒன்றியத்தில் உள்ளது. அதே ஆட்சி விவசாயப் பெருமக்களுக்கு எதிரான சட்டங்களையும் கொண்டு வருகிறது.

தொழிலாளர்களுக்கு எதிராக சட்டங்களை கொண்டு வருகிறார்கள். நரேந்திர மோடி ஆட்சி வந்த பிறகு, யாருக்காவது முழுமையாக நூறு நாள் வேலை கிடைக்கிறதா? சரியாக கிடைக்கவில்லை.

அதிமுக ஆட்சியில், பொள்ளாச்சியில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றபோது, அந்த குற்றவாளிகளை காப்பாற்றுவதில்தான் எடப்பாடி பழனிசாமி அக்கறை காட்டினார். பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைப்பதில் அவர் அக்கறை காட்டவில்லை.

அம்மையார் ஜெயலலிதாவுடன் இருந்த சசிகலா காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று நீங்கள் முதலமைச்சராக ஆனீர்கள். இன்று அவர்களுக்கே கட்சியில் இடமில்லை; அவர்களுக்கே துரோகம் செய்தவர் எடப்பாடி பழனிசாமி. இப்படிதான் அவர் பெண்களுக்கு காட்டும் மரியாதை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

குட்கா குற்றச்சாட்டில் சிக்கியவர்தான் இந்தத் தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் ரமணா. குட்காவை விற்பனை செய்ய உதவியதாக அவர்மீது சிபிஐ வழக்குகள் உள்ளது. இப்படிப்பட்ட பல குற்றச்சாட்டுகளும் வழக்குகளும் உள்ளவர்தான், எதிராக போட்டியிடும் வேட்பாளர்.

திருவள்ளூர் தொகுதியில் தி.மு.க செய்த வளர்ச்சிப் பணிகள்:

திருவள்ளூர் - ஜெ.என்.சாலையில் ரூ.308.14 கோடி மதிப்பில் அரசு மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. மப்பேடில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பெருக்கும் வகையில் உளர் துறைமுகம் அமைக்க ரூ.1200 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருவாலங்காடு முதல் அலக்கோலம் வரை இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக ரூ.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது. கடந்த 2021 தேர்தல் வாக்குறுதியில் அளித்த ஒருங்கிணைந்த புதிய பேருந்து முனையம் ரூ.37 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டது.

கடந்த 2021 தேர்தல் வாக்குறுதியில் அளித்த புறவழிச்சாலை திட்டமானது தொடங்கப்பட்டு ரூ.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றது. திருவள்ளூர் நகராட்சியில் ரூ. 1.97 கோடி மதிப்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதிய நூலகம். திருப்பாச்சூர் ஊராட்சியில் ரூ. 2.20 கோடி செலவில் 4 குடிநீர் தேக்கத் தொட்டிகள் கட்டித் தரப்பட்டுள்ளது.

**திருவள்ளூர் தொகுதிக்கான தேர்தல் வாக்குறுதிகள்:**

சேதமடைந்துள்ள கூவம் ஆற்றுத் தரைப்பாலம் புதுப்பிக்கப்படும். மப்பேடு அடுக்குமாடி குடியிருப்பில் உள்ளூர் மக்களுக்கு 70% ஒதுக்கீடு மற்றும் உளர் துறைமுகத்தில் (Dry Port) உள்ளூர் இளைஞர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

விவசாய பொருட்களைப் பாதுகாக்க தானியக் கிடங்குகள் தேவைக்கேற்ப அதிகரிக்கப்படும். திருப்பாச்சூர் சாலை நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்படும். பேரம்பாக்கத்திலிருந்து தி.நகர் மற்றும் தாம்பரம் உள்ளிட்ட முக்கியப் பகுதிகளுக்குப் போதிய அளவில் புதிய பேருந்துகள் இயக்கப்படும்.

இளைஞர்களுக்காக முதல்வர் படைப்பகம் தொடங்கப்படும். சுய உதவி குழு பெண்களுக்கு முதலீட்டுடன் தொழில் தொடங்க ரூ.5 லட்சம் வரை பிணை எதுவுமின்றி மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்கப்படும்.

தொடர்ந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர். பத்தாயிரம் பேருந்துகள் வாங்கப்பட இருக்கிறது. மினி பேருந்துகள் தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் செயல்பட இருக்கிறது. மக்களிடம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்கள் ஓட்டுக்களை அளிக்க வேண்டும் என்று பேசினார்.

முதலமைச்சர் தொடர்ந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறார். பத்தாயிரம் பேருந்துகள் வாங்கப்பட உள்ளன. மினி பேருந்துகள் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளன. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உங்கள் வாக்குகளை அளிக்க வேண்டும் என்று மக்களிடம் கேட்டுக்கொண்டார்.





தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் அமைக்கப்பட்ட தலைமை தேர்தல் பணிமனையை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு –மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் திறந்து வைத்தார்கள். உடன் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர்கள் காமராஜ், இந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஆதிமாறன் மற்றும் கழகத் தோழர்களும் கூட்டணி கட்சித் தோழர்களும் உள்ளனர்.

## அ.தி.மு.க. — பா.ஜ.க. கூட்டணி

# தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பார்க்கிறது!

### எஸ்.பாறைப்பட்டியில் — அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல். ஏப்.8-

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பாக்கிறது என்று எஸ்.பாறைப் பட்டியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசிய தோடு. எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலையில்தான் முதல்வர் மு.க. ஸ்டாலின் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் என்று ஐ.பெரியசாமி அவர்கள் பொது மக்கள் மத்தியில் பெருமிதமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தி.மு.க. சார்பாக போட்டியிடும் வெற்றி வேட்பாளர் ஐ.பெரியசாமி அவர்கள், இம்முறை தொடர்ந்து 9வது முறையாக போட்டியிடுகிறார். ஆத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களுக் கும் சூறாவளியாக சுற்றுப் பயணம் செய்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார்.

ஆத்தூர் ஒன்றியம், எஸ். பாறைப்பட்டி ஊராட்சிக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு 300க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பூரண கும்ப மரியாதையுடன் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்கள் மத்தி யில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள்: தமிழகத்தில் தற்போது போட்டியிடும் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்கப் பார்க்கிறது. 100 நாள் வேலை திட்டம் இல்லையென்றால் கிராமங்களில் வேலை இல்லாத் திண்டாட்டம் உருவாகிறது. இதை உணர்ந்து தான் முத்தமிழ் அறிஞர் கலைஞரும், அன்னை சோனிய காந்தியும், 100 நாள் வேலை திட்டத்தை சட்டமாக்கினார்கள்.

இப்போது மத்தியல் ஆளும் பா.ஜ.க. அரசு அதன் பெயரை மாற்றியதோடு, தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியையும் கொடுக்க மறுக்கிறது. பா.ஜ.க. அரசு தமிழகத்தில் 100 நாள் வேலைத் திட்டத்தை முடக்க நினைத்தால், நமது தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதைத் தடுத்து நிறுத்து வார். தமிழகத்தை எப்போதும்; தலைகுனிய விடமாட்டார் என்றார்.



மீண்டும் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்ததுடன் நீங்கள் வைத்த கோரிக்கைகள் அனைத்தும் 100 சதவீதம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். இது உறுதி என்றார். பிரச்சா ரத்தில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், ராஜேந்திரன், முருகேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சி மன்றத் தலைவர் பாஸ்கரன், ஒன்றிய அவைத்தலைவர் காணிக்கைசாமி, மாவட்ட விவசாய துணை அமைப்பாளர் சொக்கலிங்கபுரம் சசி குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்கள் நாகலெட்சுமி சசிகுமார், கருப்பையா, சிவக்குமார், ராஜேஸ்வரி தங்கவேல், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பாப்பாத்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ட அணியைச் சேர்ந்த வாஞ்சிநாதன், கணேசன், கிளைச் செயலாளர் மாயப்பன், மற்றும் கிருஷ்ணன், மாயி, டாஸ்மாக் வடிவேல் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் - முதல்வரின் அளப்பரிய சாதனைகளால்

# தி.மு.க. கூட்டணியின் வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை. ஏப் 8-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் அமைச்சர், மாவட்ட செயலாளர் கேஆர். பெரிய கருப்பன் ஐந்தாவது முறையாக போட்டியிடுகிறார். அவர் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தபின் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



வருகிற ஏப்ரல் 23ஆம் தேதி தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ளது. இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தமிழகத்தில் 234 தொகுதிகளில் வேட்பாளர்கள் களம் காண்கிறார்கள். கழகத் தலைவர் தளபதி அவர்கள் 25க்கும் மேற்பட்ட கூட்டணி கட்சிகள், ஒத்த கருத்துடைய 50க்கும் மேற்பட்ட சமூக அமைப்புகள் சேர்த்து மிகப்பெரிய கூட்டணி அமைத்துள்ளார் . இந்த கூட்டணி தமிழகத்தில் மக்களிடம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது . இந்த கூட்டணி கொள்கை கூட்டணி யாக அமைந்துள்ளது. தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று வருகிறது. கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளில் கழக தலைவர் செய்த சாதனைகளை மக்களிடம் எடுத்துக் கூறி நாம் வாக்குகளை பெற வேண்டும். மக்கள் நமக்கு வாக்களிக்க தயாராக உள்ளார்கள். அனைத்து வாக்காளர்களை கவர்ந்திடும் வகையில் நம்முடைய பணி அமைய வேண்டும் 2021 முதல் 2026வரை முதல்வர் அளப்பரிய திட்டங்களை நிறைவேற்றி அதை செயல்படுத்தி உள்ளார். அவருடைய திட்டங்களை மற்ற மாநிலங்களும் செயல் படுத்தி வருகிறது. இதனால் இந்தியாவிலேயே தமிழக முதல்வர் அவர்கள் மிகப்பெரிய செல்வாக்கு பெற்ற தலைவராக திகழ்ந்து வருகிறார்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு பெருத்த ஆதரவு உள்ளது. வருகின்ற தேர்தலில் அதிக அளவில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றியினை பெறும். ஆனாலும் நாம் தேர்தலில் தீவிரமாக களப்பணி ஆற்ற வேண்டும். எந்த வேட்பாளருக்கும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற ஒரு எண்ணம் இருக்கும். வெற்றி பெறும் வரை ஒருபதட்டமும் இருக்கும். ஆனால் மக்கள் நமக்கு ஆதரவு தந்து உள்ளார்கள் என்பதை வருகிறமே நான்காம் தேதி தேர்தல் முடிவுகள் வாயிலாக தெரியவரும்.

எனக்கு இத்தொகுதியில் நான்குமுறை போட்டியிட முதல்வர் அவர்கள் வாய்ப்பு தந்துள்ளார். இம்முறை ஐந்தாம் முறையாக போட்டியிடுகிறேன்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதி களில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தளபதி தலைமையிலான கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும். இரண்டாவது முறையாக முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்பார்கள். இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கூறினார்.

பேட்டியின் போது மாவட்ட மாநில செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ் உடன் இருந்தார்.

## சட்டமன்றத் தேர்தல் - 2026

### கழகத் துணைப் பொதுச் செயலாளர்

# கனிமொழி கருணாநிதி எம்.பி.



### தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண விவரம்

## (திருப்பத்தூர், தர்மபுரி, சேலம்)

**08.04.2026 (புதன்கிழமை)**

| நேரம் | இடம் |
|---|---|
| 10:00 AM | ஜோலார்பேட்டை தொகுதி - புதுப்பேட்டை |
| 04:00 PM | அரூர் தொகுதி - அரூர் பேருந்து நிலையம் அருகில் |
| 05:30 PM | ஏற்காடு தொகுதி- அயோத்தியாபட்டினம் இரயில்வே கேட் |
| 06:30 PM | வீரபாண்டி தொகுதி - எருமாபாளையம் |
| 07:30 PM | சேலம் தெற்கு தொகுதி - காந்தி மைதானம் |
| 08:30 PM | சேலம் மேற்கு தொகுதி - மெய்யனூர் வி.எஸ்.டி மோட்டார்ஸ் அருகில் |

## நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில்

# மாற்றுக்கட்சியினர் 500 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

*கடலூர், ஏப்.8–*

*கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சியின் தி.மு.க. வேட்பாளரும், தற்போதைய சட்ட மன்ற உறுப்பினருமான சபா.இராசேந்திரன் மாற்றுக்கட்சியினர் திமுகவில் இணைந்த மாபெரும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*நெய்வேலி தொகுதிக்கு உட்பட்ட சிறுவத்தூர் ஊராட்சி ஒன்றிய கவுன்சிலரும், தமிழக வாழ்வுரிமை கட்சியின் ஒன்றியச் செயலாளருமான தேவராஜ் தலைமையில், திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் அவர்களின் கொள்கையை ஏற்று தேவநாதன், வெற்றிவேல், கோபி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளுடன் 500க்கும் மேற்பட்டோர் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.*

*அதேபோல், சிறுத்தொண்டமாதேவி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கபடி பாண்டியன் மகன் சூர்யா தலைமையில் 50 பேர், வீரசிங்கன்குப்பம் பகுதியைச் சேர்ந்த தாமோதரன் தலைமையில் 50 பேர் என மொத்தம் 600 பேர் சபா. இராசேந்திரன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சபா. பாலமுருகன், தலைமைப் பொதுக்குழு உறுப்பி னர் அறிவழகன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ் குமார், அவைத் தலைவர் சிவக் குமார், துணைச் செயலாளர் செழியன், வழக்கறிஞர் ஜெகஜீவன்ராம், செம்மேடு அருள் ஜோதி, மாவட்டப் பிரதிநிதி பூபாலன், கிளைச் செயலாளர்கள் தங்கவேல், ராமதேவன், சிற்றரசு, இளைஞரணி துணை அமைப்பாளர்கள் முருகன், ராஜ்குமார், தொ.மு.ச. வெங்கடேசன், சி.பி.ஐ. ஞானசேகர், செல்வம், கிருஷ்ணமூர்த்தி, பாலாஜி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலரும் உடனிருந்து வரவேற்றனர்.*

## தியாகராயர் நகர் தொகுதி வேட்பாளர் ராஜா அன்பழகன்

# 131 'அ' வட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார்!

### வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்!

*சென்னை, ஏப். 8–*

*தியாகராயர்நகர் சட்ட மன்ற தொகுதி வெற்றி வேட்பாளர் ராஜா அன்பழகன் 131 'அ' வட்டத்தில் வீடு வீடாக சென்று வாக்கு சேகரிக்கிறார்.*

*வாக்கு சேகரிப்பு 09.04.2026 நாளை காலை 10.00 மணிக்கு வட்ட செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை, கோ.சு.மணி, ஆகியோர் முன்னிலையில் அம்மன் கோவில் தெருவில் (வடபழனி, சைதைப்பேட்டை ரோடு அருகில்) துவங்கி Dr.சுப்பராயர் நகர் 6வது தெருவில் முடிவடைகிறது.*

*ஆகையால் மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், 131 'அ' வட்ட நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் கழகத்தினர் கலந்துகொள்ள வேண்டுமாய் வட்டச்செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.*



சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி அயலக அணி துணை அமைப்பாளர் எஸ்.ரபிக் ராஜா தலைமையில் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி 129 வது வட்டத்தில் கழகத்தின் வெற்றி வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜாவை ஆதரித்து பொதுமக்களிடம் வாக்கு சேகரித்தனர். இந்நிகழ்வில் பகுதிக் கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி, வட்டக் கழகச் செயலாளர் பழக்கடை எஸ்.பாஸ்கர், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி தோழர்கள் உடன் இருந்தனர்.

# பீதியில்...!

எடப்பாடி மறைக்க முனைந்த
பொள்ளாச்சி பாலியல்
சம்பவத்திற்கும்

சாத்தான்குளம்
கொடுமைக்கும்

நீதி பெற்றுத் தந்திருக்கும்
முத்துவேல் கருணாநிதி
ஸ்டாலினின்
திராவிட மாடல்
ஆட்சி

அடுத்து கொடநாடு மர்மத்தின்
முடிச்சையும் அவிழ்க்கும்
என்னும் அச்சத்தில்

பீதியிலும் பேதியிலும்
மடப்பாடி...



**என்னநாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்